பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 01 2026 THURSDAY   12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்து விவாதிப்பதற்காக மத்திய அரசு வரும் 27ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

- பெண்கள் அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- சனாதனம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்த தமிழக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலினை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

- இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் விரைவில் எட்டப்படும் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

- இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் மற்றும் பி.வி. சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வது குறித்து விவாதிப்பதற்காக மத்திய அரசு வரும் செவ்வாய்க்கிழமை அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தக் கூட்டத்தொடர், வரும் 28ஆம் தேதி தொடங்குகிறது.

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் அடுத்த மாதம் 1ஆம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது.

>>>>>>>><<<<<<<<

பெண்கள் அனைத்து துறைகளிலும் முத்திரை பதித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ‘பெண் குழந்தைகளை காப்போம், அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்’ என்ற திட்டம், கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் அறிமுகப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த திட்டம் காரணமாக, ஒவ்வொரு துறையிலும் பெண்கள் முத்திரை பதித்து வருவதோடு, நாட்டின் வளர்ச்சிக்கும் முக்கியப் பங்களித்து வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

அடல் ஓய்வூதிய திட்டத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, தொழிலாளர்களுக்கு கிடைத்த மிகப் பெரிய பரிசாகும் என்று வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன் மூலம் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் பாதுகாப்பான எதிர்காலத்தை இந்த திட்டம் உறுதி செய்துள்ளதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானும், மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு இது வலுசேர்க்கும் என்று கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ், இதுவரை 8 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

சனாதனம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை தெரிவித்ததற்காக, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையால் கண்டனத்திற்கு உள்ளான துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் பதவிநீக்கம் செய்யப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

*இன்று சென்னையில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமியை சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் திரு. உதயநிதி ஸ்டாலின் கருத்துக்களை தெரிவித்தது ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறினார்.*

*தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.*

*அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், தங்கள் கூட்டணி வலுவடைந்து வருவதாக கூறினார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மதுராந்தகத்தில் பங்கேற்கவுள்ள பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து, திரு. பியூஸ் கோயலுடன் ஆலோசனை மேற்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்தக் கூட்டம் தமிழக அரசியலில் திருப்புமுனையாக அமையும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.*

*>>>>>>>><<<<<<<<*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு வெகுவாக உயர்ந்துள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.*

*டாவோஸில் நடைபெற்று வரும் உலக பொருளாதார அமைப்பின் வருடாந்திரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*உலக பொருளாதார வளர்ச்சிக்கும் இந்தியா பெரிய அளவில் பங்களித்து வருவதாக திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.*

*>>>>>>>><<<<<<<<*

*தெலங்கானாவில் 100 கோடி ரூபாய் மதிப்பிலான, அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான நிதியம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி அறிவித்துள்ளார்.*

அரசுமுறைப் பயணமாக டாவோஸ் சென்றுள்ள அவர், இதுதொடர்பான கொள்கையை வெளியிட்டார்.

தனியார் பங்களிப்புடன் இந்த நிதியம் ஏற்படுத்தப்படுவதாகவும் திரு. ரேவந்த் ரெட்டி கூறினார்.

>>>>>>>><<<<<<<<

ஜார்க்கண்ட் மாநிலத்தில் சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், 245 மண்டல சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. இர்ஃபான் அன்சாரி கூறியுள்ளார்.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆயுஷ்மான் பாரத் சுகாதார கட்டமைப்பு இயக்கத்தின் கீழ் இந்த மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

203 கோடி ரூபாய் செலவில் இந்த மையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் திரு. இர்ஃபான் அன்சாரி தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

மேற்குவங்கத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை நிறைவேற்றுமாறு தேர்தல் ஆணையம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மேற்குவங்க காவல்துறை தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள், உச்சநீதிமன்ற உத்தரவுகள் முழுமையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

வந்தேமாதரம் பாடலின் 150வது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, விமானப்படை இசைக்குழு நிகழ்ச்சி புதுதில்லியில் நடைபெற்றது.

31 இசைக்கலைஞர்கள் இதில் பங்கேற்று, வந்தேமாதரம் பாடலை இசைத்தனர்.

ஆப்பரேஷன் சிந்தூரின் வெற்றி குறித்த பாடலும் இதில் இடம்பெற்றது.

>>>>>>>><<<<<<<<

கர்நாடக சட்டப்பேரவை கூட்டத்தொடர், ஆளுநர் உரையுடன் இன்று தொடங்கியது.

பேரவை கூடியதும், அம்மாநில ஆளுநர் திரு. தாவர்சந்த் கெலாட், இரண்டு வரிகளைப் படித்துவிட்டு உரையை முடித்துக் கொண்டார்.

இதற்கிடையே, ஆளுநரின் இந்த நடவடிக்கை ஏற்புடையதல்ல என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா கூறியுள்ளார்.

உரையை முழுமையாக ஆற்ற வேண்டியது ஆளுநரின் கடமை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆளுநரின் நடவடிக்கை தொடர்பாக, உச்சநீதிமன்றத்தை அணுகுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் திரு. சித்தராமையா கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<<

ஜார்க்கண்ட்டில் பாதுகாப்பு படையினருக்கும் நக்ஸலட்டுகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

மேற்கு *Singhbhum* மாவட்டத்திற்கு உட்பட்ட *Saranda* வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது, நக்ஸலட்டுகள் தாக்குதல் நடத்தியதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு கூடுதல் பாதுகாப்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>>>><<<<<<<<<

இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் விரைவில் எட்டப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

உலக பொருளாதார அமைப்பின் வருடாந்திர கூட்டத்தில் பங்கேற்பதற்காக டாவோஸ் சென்றுள்ள அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது நெருங்கிய நண்பர் என்றும் அமெரிக்க அதிபர் கூறியுள்ளார்.

இந்த வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பிற்கும் பலன் அளிக்கும் வகையில் இருக்கும் என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

ஐ.நா பாதுகாப்புக் குழுவில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்த வரைவினை, ஜி.4 அமைப்பு வெளியிட்டுள்ளது.

ஐ.நா பாதுகாப்பு குழுவில் உடனடியாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தியா, பிரேஸில், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள இந்த ஜி.4 அமைப்பு, ஐ.நா பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பினர் பதவி வழங்குவதற்கு பரஸ்பரம் ஆதரவு தெரிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

நியூஸிலாந்தில் நேரிட்ட நிலச்சரிவில் சிக்கிய 7 பேரை தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Mount Maunganui அருகே இந்த நிலச்சரிவு நேரிட்டதாக அந்நாட்டு பேரிடர் மீட்பு துறை கூறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் மற்றும் பி.வி. சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் லக்ஷயா சென், 21-10, 21-11 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் Jason Gunawan-ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் பி.வி. சிந்து, 21-19, 21-18 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் Line Hojmark Kjaersfeldt-யை வென்றார்.

>>>>>>>><<<<<<<<

*Manama*-வில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் *Prarthana Thombare* - ரஷ்யாவின் *Alevtina Ibragimova* இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை *6-4, 7-5* என்ற செட்கணக்கில் இந்தியாவின் *Vasanthi Shinde – Romania*-வின் *Briana Szabo* இணையை வென்றது.

>>>>>>>><<<<<<<<

மஸ்கட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Swastika Ghosh – Taneesha Kotecha* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>>>><<<<<<<<